# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>ரமழான் மகிழ்வை பகிர்ந்துகொள்ளும் இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>**

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் புனித ரமழான் மாதத்தில் சமூக உள்ளுணர்வைக் கொண்டாட பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

2. 2025 மார்ச் 4 ஆம் திகதியன்று கோல்பேஸ் ஹோட்டலில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் இப்தார் விருந்துபசாரம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மேல் மாகாண ஆளுநர் கௌரவ ஹனிப் யூசுப் அவர்கள் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார். அத்துடன் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் கௌரவ முனீர் முலாபர், எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதானிகள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள், சிரேஸ்ட அரச அதிகாரிகள் மற்றும் நீதித்துறை சார்ந்த உறுப்பினர்கள், வர்த்தக சமூகத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

3. இப்புனித மாதத்தில் இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இந்திய கொன்சியூலர் காரியாலங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கு பண்டிகைக் கால பொதிகள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களையும் விநியோகித்தன.

4. பல்வேறு மட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், உள்ளூர் நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் சமூக மட்ட உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து, 2025 மார்ச் 16 ஆம் திகதி அன்று புத்தளம் மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களுடனான பொதிகளை உயர் ஸ்தானிகராலயம் விநியோகித்தது. மார்ச் 20 ஆம் திகதி கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும், மார்ச் 21 ஆம் திகதி குருநாகலிலும் உள்ள குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சியூலர் ஜெனரல் காரியாலயம் 2025 மார்ச் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், மன்னார், நயினாதீவு மற்றும் வேலணை ஆகிய இடங்களில் உள்ள குடும்பங்களுக்கு பொருட்களை விநியோகித்தமை குறிப்பிடத்தக்கது.

5. புனித ரமழான் மாதத்தில் இவ்வாறு பண்டிகைகளின் மகிழ்வை பரப்புவதை நோக்கமாகக் கொண்டு இப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டதுடன் இது இந்தியா-இலங்கை இடையிலான தனித்துவமான உறவின் மக்கள் - மக்கள் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அமைகின்றது.

**********

**கொழும்பு**
**2025 மார்ச் 28**